செ.வெ.எண்.329 நாள்.12.07.2017

# காஞ்சிபுரம் மாவட்டத்தில் அமைப்பு சாரா நலவாரியம் மற்றும் கட்டுமான நலவாரிய உறுப்பினர்கள் வரும் 31.07.2017 தேதிக்குள் ஆதார் எண்ணை இணைக்க வேண்டும்

- மாவட்ட ஆட்சித் தலைவர். திரு. பா. பொன்னையா இ.ஆ.ப., அவர்கள் தகவல்.

காஞ்சிபுரம் மாவட்டத்தை சேர்ந்த அமைப்பு சாரா மற்றும் கட்டுமான நல வாரியங்களில் பதிவு செய்துள்ள உறுபினர்கள் வரும் ஜீலை 31–ம் தேதிக்குள் ஆதார் எண்ணை இணைக்க வேண்டும் என காஞ்சிபுரம், மாவட்ட ஆட்சியர் திரு. பா. பொன்னையா இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

மாநில அளவில் அமைப்பு சாரா தொழிலாளர்கள் நலனைப் பாதுகாக்கும் வகையிலும் ஒழுங்குபடுத்தும் நோக்கத்திலும் அரசு நலவாரியங்கள் உருவாக்கப்பட்டு அதன் மூலம் பல்வேறு நலதிட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகிறது.

இதன் அடிப்படையில் தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர் நல வாரியம், உடலுழைப்புத் தொழிலாளர் நலவாரியம், அமைப்புசாரா ஓட்டுநர்கள் நலவாரியம், தையல் தொழிலாளர் நலவாரியம், முடித்திருத்துவோர் நலவாரியம், சலவைத் தொழிலாளர் நலவாரியம், பனைமரத் தொழிலாளர் நலவாரியம், காலணி, தோல் பொருட்கள் உற்பத்தி, தோல் பதனிடுதல் தொழிலாளர் நலவாரியம், ஓவியர் நலவாரியம், பொற்கொல்லர் நலவாரியம், மண்பாண்டத் தொழிலாளர் நலவாரியம், வீட்டுப் பணியாளர் நலவாரியம், சமையல் தொழிலாளர் நலவாரியம் உள்பட 17 நலவாரியங்களில் மாநில அளவில் மொத்தம் 50 லட்சம் பேர் உறுப்பினர்களாகப் பதிவு செய்துள்ளனர்.

அரசின் நலத்திட்ட உதவிகள் அனைவருக்கும் சென்று சேரவேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையில் இனிவரும்காலங்களில் உறுப்பினர்கள் அரசு நலத்திட்ட உதவிகள் பெறுவதற்கு தங்களது உறுப்பினர் அடையாள அட்டை நகலுடன், ஆதார் அட்டை எண்ணையும் அவசியம் அளிக்க வேண்டும்.

இதன் அடிப்படையில் காஞ்சிபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த தொழிலாளர்கள் தங்களது பதிவு அடையாள அட்டை நகலுடன், ஆதார் அடையாள அட்டை நகலையும், இணைத்து வரும் ஜீலை 31–ம் தேதிக்குள் எண். 46B, விளக்கடிக் கோயில் தெரு, ரங்கசாமிகுளம் அருகில் காஞ்சிபுரம். 631501 –ல் உள்ள தொழிலாளர் நல வாரிய அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.

மேலும், இது குறித்து 044–27230279 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொண்டு விவரங்களை அறிந்து கொள்ளலாம் என மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள்ளார்.

செய்தி வெளியீடு,
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
காஞ்சிபுரம்.